

ஈஷா மையத்தில் தியான லிங்கம்...









தியான லிங்க வழிபாடு மற்றும் சொற்பொழிவு...



# மகா சிவராத்திரி இரவை கொண்டாடுவோம்!

மகா சிவராத்திரி- பலப்பல வாய்ப்புகளை ஒளித்து வைத்திருக்கும் ஓர் அற்புத இரவு. சிவராத்திரிதான் இருப்பதிலேயே மிகவும் இருளான ராத்திரி. வருடத்துக்கு ஒரு முறை வரும் மகா சிவராத்திரியைக் கொண்டாடுவது என்பது, இருளைக் கொண்டாடுவது போல்தான்.

'என்ன, இருளைக் கொண்டாடுவதா?' என்று உங்கள் மனம் முரண்டு பிடிக்கும். ஆனால், ஷிவா என்பதற்கு 'இல்லாதது' என ஓர் அர்த்தம் உண்டு.

உங்களைச் சுற்றிலும் கவனியுங்கள். உங்கள் பார்வையில் வருவது எல்லாமே படைப்பின் சிறு சிறு அம்சங்கள்தாம். உங்களுக்கு மிகப் பெரிய வடிவமாகத் தோன்றும் சூரியன்களும், நட்சத்திரங்களும், கிரகங்களும் எங்கே மிதக்கின்றன? அளவிட முடியாத ஓர் அண்ட வெளியில். நீங்கள் காணும் இவை யாவற்றையும் நிரப்பியது போக அந்த அண்டத்தில் எஞ்சியுள்ள வெறுமை, எவ்வளவு பிரமாண்டமானதாக இருக்கிறது! இந்த அளவிட முடியாத வெறுமைதான் ஷிவா. இந்த வெறுமையையே மகாதேவன் என்கிறோம். இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சிகளும், 'எல்லாமே ஒன்றும் இல்லாததிலிருந்து உருவானவை' என்றும், 'முடிவில் அனைத்தும் அந்த ஒன்றுமில்லாததில் போய்க் கரைந்து விடுகின்றன' என்றும் நிரூபித்திருக்கின்றன.

எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவனையே எந்த ஒரு மதமும், கலாசாரமும் இறைவன் என்று குறிப்பிடுகின்றன. நீக்கமற எங்கும் எப்போதும் நிறைந்திருப்பது எது? வெளிச்சமா? இருளா? கவனித்துப் பாருங்கள். இருள் ஏற்கெனவே உள்ளது. அது நிரந்தரமானது. அதை உருவாக்க எதனுடைய தயவும் தேவையில்லை. ஆனால், வெளிச்சம்? அது தற்காலிகமானது. வெளிச்சத்துக்கு ஏதாவது ஆதாரம் தேவை. அதற்கு ஓர் ஆரம்பம் உண்டு; ஒரு முடிவும் உண்டு. எத்தனை வெளிச்சமானாலும், இருளை முற்றிலும் விலக்க முடியாது என்பதை நிழல்கள் தெரிவிக்கும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**



## ஈஷா மையத்தில் சிவராத்திரி!

**சி**வராத்திரி இரவில் முதுகெலும்பை நேராக நிமிர்த்தி வைத்திருந்தால், இயல்பாகவே சக்தி மேல்நோக்கிப் பயணம் செய்யும் என்பதால்தான் இரவு உறங்காமல் விழித்திருக்கும் பழக்கம் கொண்டு வரப்பட்டது.

கோவை- பூண்டி ஈஷா மையத்தில் ஒவ்வோர் ஆண்டும் யோகக் கலையின் ஆதிகுருவாகக் கருதப்படும் ஷிவனின் அருளைக் கொண்டாடும் இரவாக சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. சென்ற வருடம் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பலனடைந்தனர். இந்த வருடமும் சிவராத்திரியன்று, ஈஷா மையத்தில் இரவில் சத்குருவின் சொற்பொழிவு, சக்தி மிகு தியானப் பயிற்சிகள், தியான லிங்கத்தின் முன்னிலையில் குரு பூஜை ஆகியன நடைபெறும். இசை நிகழ்ச்சிகளும் உண்டு.

பொதுவாக வெளிச்சம் பல விஷயங்களை ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுத்திக் காட்டும். பகலில் புல்லாக, புழுவாக, மரமாக, மலையாக, கடலாக, விலங்காக, மனிதனாக வெவ்வேறு வடிவங்களில் பரிமளிக்கும் படைப்புகள் எல்லாம் முற்றிலும் இருள் சூழ்ந்த நேரத்தில் தங்கள் தனி வடிவங்களை இழந்து இருளில் ஐக்கியமாகி விடும். எல்லாவற்றின் வித்தியாசங்களையும் மழுங்கடித்து ஒன்றாக்கி விடுவதுதானே கடவுள்? இருளுக்குத்தானே அந்த சிறப்பு குணம் அமைந்திருக்கிறது? எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதுதான் கடவுள் என்றால், அது இருளைத்தான் குறிக்கும். ஆதியும் அந்தமும் அற்றது இருள்தான். பக்குவமற்ற மனதுதான், இருளை சாத்தான் என்று நினைக்கும்.

> "எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதுதான் கடவுள் என்றால், அது இருளைத்தான் குறிக்கும்."

ஷிவா என்று குறிப்பிடுவது எங்கும் நிறைந்திருக்கும் இந்த ஒன்றுமில்லாத, வெறுமையான, இருளைத்தான். இந்த வெறுமையின் மடியில் தான் அத்தனை படைப்புகளும் நிகழ்ந்தன. இந்த வெறுமையின் மடியில்தான் அத்தனையும் முடிகின்றன. இதைக் கொண்டாடும் விதமாக மகா சிவராத்திரி அமைந்திருக்கிறது. ஒன்றுமில்லாததிலிருந்து உருவான நீங்கள், அந்த வெறுமையின் ஒரு விதைதான் என்பதை உங்களுக்குள் உணரும் அற்புத வாய்ப்பு உள்ள இரவு இது. ஷிவா, வழங்குவதில் வள்ளல். அவன் பக்தர்களுக்கு வாரி வழங்கிய கதைகள் உண்டு.

ஒரு சிவராத்திரி. தனது கலயம் நிறையாததால் குறைப்பட்டு நின்றிருந்தான், பிச்சைக்காரன் ஒருவன். "ஷிவா... உன்னைக் கொண்டாடும் இந்த ராத்திரியில் எனக்கு எதுவும் கிடையாதா?" என்று கேட்டான். அடுத்த கணம் அந்த வழியில் பளபளக்கும் ரதம் ஒன்று வந்தது. 'செல்வந்தன் ஒருவனை சிவன் அனுப்பியிருக்கிறான்.. அவன் தனது கலயத்தை நிரப்பி விட்டுப் போவான்' என்று பிச்சைக்காரன் பரபரப்பானான். ரதம் அருகில் வந்து நின்றது. ஆடம்பரமான ஆடைகள் அணிந்தவனின் கம்பீரமான முகம் வெளிப்பட்டது. கை வெளியே நீண்டது. குரல் சற்று இறைஞ்சிக் கேட்டது: "ஏதாவது பிச்சை போடேன்!" தன்னிடம் பிச்சை கேட்பவனை, பிச்சைக்காரன் கேவலமாகப் பார்த்தான். கலயத்திலிருந்து ஒரு பருக்கையை எடுத்து அலட்சியமாக அந்த தாழ்ந்த கையில் போட்டான். ரதத்தில் வந்தவன் வணங்கி அதைப் பெற்றான். ரதம் அங்கிருந்து விரைந்தது. பிச்சைக்காரன் சலிப்புடன் படுக்க நினைத்து, தன் கிழிசல் பாயை விரித்தான். அதில் பளபளவென்று ஒரு தங்கப் பருக்கை மின்னியது. ரதத்தில் வந்தது யாரென்று சடாரென்று அவனுக்குப் புரிந்தது. "ஐயோ, ஒற்றைப் பருக்கையைப் போட்டதற்கு ஒற்றைப் பருக்கை பொன் கொடுத்த என் இறைவா, தெரிந்திருந்தால், என்னிடமிருப்பதை எல்லாம் அள்ளிப் போட்டிருப்பேனே!" என்று அழுதான். வழங்கும்போது கையை சுருக்கிக் கொண்டவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதற்காகச் சொல்லப்படும் கதை இது.

நீங்கள் உருவான மடியை தரிசிக்க சிவராத்திரியைப் போன்றதொரு ஆதரவான தினம் கிடையாது. ஒரே ஒரு கணமாவது உங்களுக்குள்ளேயும், வெளியிலும் நிறைந்திருக்கும் அந்த வெறுமையை நீங்கள் உணர வேண்டும். விழிகள் மட்டும் விழித்திருக்கும் உறக்கமற்ற இரவாக அமைவதில் பயனில்லை. உள்ளிருக்கும் உங்கள் விழிப்பு உணர்வு ஒரு தருணத்திலாவது உச்சத்தில் இருக்கும் இரவாக இந்த இரவு அமையட்டும்!

தொகுப்பு: சுரேஷ்-பாலா